# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 219/மா/2024**

**நாள்: 23.04.2025**

| | | |
|---|---|---|
| திரு. R. மயில்சாமி<br>மதுரை | --- | முறையீட்டு மனுதாரர் |
| (1) உதவி ஆணையர்<br>மண்டலம் 2<br>மதுரை மாநகராட்சி<br>(2) திரு. ஜெயக்குமார் மற்றும்<br>திருமதி J. சுகன்யா, மதுரை | --- | எதிர் மனுதாரர்கள் |

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.ஆர்.மயில்சாமி என்பவரின் 15.10.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.10.2024 அன்று பெறப்பட்டு, 219/மா/2024 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.ஆர்.மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகாரினை தெரிவித்துள்ளார்:-

“மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு) வார்டு எண்.1, புதுவிளாங்குடி பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் கதவு எண்.107/2A, நேதாஜி மெயின் ரோடு, திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை தெற்குபுறம், புது விளாங்குடி, மதுரை 18–ல் முகவரியில் கே.ஜெயக்குமார் என்பவருக்கு சொந்தமான வர்த்தக கட்டிடத்திற்கு மதுரை மாநகராட்சியில் 92.78 ச.மீ கட்டிட அனுமதி பெற்றுக் கொண்டு சுமார் 3,000 சதுரடிக்கு மேலாக கூடுதலாகவும் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தில் அப்பலோ டயர்ஸ் (Apollo Tyres), பவர் ஜோன் பேட்டரி (Power Zone Battery) மற்றும் செல்வம் டூவீலர் ஸ்பார்ட்ஸ் மொத்த உதிரி பாகங்கள் கடைகள் சட்டத்திற்கு புறம்பாக கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடம் வர்த்தக கட்டிடம் (Commercial Building) என்பதாலும், 3,000 சதுரடிக்கு கூடுதலாக கட்டப்பட்ட கட்டிடத்திற்கு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் திட்ட அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இதனால் பல லட்சம் ரூபாய் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இது குறித்து, புகார் மனுவை 19.12.2024 தேதி பதிவு அஞ்சலில், மதுரை மாநகராட்சி ஆணையாளர் மற்றும் உதவி ஆணையாளர் அவர்கள் மண்டலம் 2 (வடக்கு) K. புதூர், மதுரை–7

அவர்களுக்கு புகார் மனு அளித்தும், இன்று வரையிலும் மேற்படி முகவரியில் உள்ள கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. கண் துடைப்பாக 22.12.2023 தேதியில் உரிமையாளர் K. ஜெயக்குமார் அவர்களுக்கு நோட்டீஸ் வழங்கப்பட்ட பின்பு, மேற்படி கட்டிடத்தின் மீது இன்று வரையிலும் நடவடிக்கை எடுக்கவில்லை. மேற்படி கட்டிட உரிமையாளர் அவர்களிடம் ஏதோ ஒரு பலனை மாநகராட்சி அலுவலர்கள் பெற்று நடவடிக்கை எடுக்கவில்லை. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை வழக்கு எண்.W.P(MD) No.3140 of 2019 உத்தரவு நாள் 12.12.2023 ஆணையின்படி, விதி மீறிய கட்டிட உரிமையாளர்கள் மீது குற்றவியல் (Criminal case) நடவடிக்கை எடுக்க உத்தரவிட்ட நிலையில் மேற்படி கட்டிடத்தின் மீதும், கட்டிட உரிமையாளர் மீது நடவடிக்கை இதுநாள் வரையிலும் எடுக்க தவறிய உதவி ஆணையர் மற்றும் முன்னால் உதவி ஆணையர்கள் மற்றும் இதற்கு சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்கள் மீதும் துறை ரீதியான கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்திரவிட்டும், தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971–ன் பிரிவுகள் 56 மற்றும் 57, உடன்படிக்கப்பட்ட பிரிவு 85–ன் கீழ் மற்றும் வீட்டு வசதி துறையில் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.7 நாள் 10.01.2023–ன்படி (Lock and Seal) மூடி முத்திரையிட்டும், தாக்கீது De-occupation மற்றும் Stop work notice/notice calling for approval plan அறிவிப்பினையும், அதன் தொடர்ச்சியாக மேற்படி கட்டிடத்தினை அகற்றிட (Removal) விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்க மாநகராட்சி அதிகாரிகளுக்கு உத்திரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை மிகத் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 27.11.2024 நாளிட்ட அறிவிக்கை மூலம் மதுரை மாநகராட்சி, மண்டலம் 2 (வடக்கு), உதவி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. மதுரை மாநகராட்சி மண்டலம் 2ன் உதவி ஆணையர் தன்னுடைய 27.12.2024 மற்றும் 14.03.2025 நாளிட்ட அறிக்கைகளில் :-

“மனுதாரர் புகாரில் தெரிவித்துள்ள மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வார்டு 1, புதுவிளாங்குடி பிட்1, சர்வே எண்.107/2Aல் 92.78 ச.மீ பரப்பளவில் தரை தளத்தில் வணிக கட்டிடம் கட்ட இவ்வலுலகம் கடித எண்.ம1/647/21, நாள் 04.09.2021ன்படி கட்டிட அனுமதி திரு.ஜெயக்குமார் மற்றும் திருமதி.ர.சுகன்யா ஆகியோரின் பெயரில் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் மனுதாரர் கட்டிட அனுமதிக்கு மாறாக கீழ்க்கண்ட மாறுதல்களுடன் கட்டிடம் கட்டியுள்ளார்.

1. அனுமதிக்கப்பட்ட தரை தளம் 92.78 ச.மீ பதிலாக 2500 சதுரடி பரப்பளவில் வணிக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.
2. அனுமதியின்றி தரை கீழ்தளம் 2,500 சதுரடி பரப்பளவில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.
3. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி முன்பக்கம் பின்பக்கம் மற்றும் பக்கவாட்டு திறவிடங்கள் விடப்படவில்லை.

கட்டிட உரிமையாளர் கட்டிட அனுமதிக்கு மாறுதலாக மேற்கண்ட மாறுதல்களுடன் கட்டிடம் கட்டியதால் மதுரை மாநகராட்சி சட்டப்பிரிவு 296(1)(2)–ன் கீழ் 01.11.2023–ன்படி அறிவிப்பு அனுப்பப்பட்டது. இதனை தொடர்ந்து மதுரை மாநகராட்சி சட்டப்பிரிவு 296(3)–ன் கீழ் 22.12.2023ல் உறுதி அறிவிப்பு அனுப்பப்பட்டது.

மீண்டும் மேற்படி கட்டிடத்திற்கு புதிய தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 134,135(1)(2)–ன் கீழ் அறிவிப்பு 27.08.2024ல் அனுப்பப்பட்டது. மேற்படி கட்டிட உரிமையாளரிடமிருந்து எவ்வித பதில் பெறப்படாததால் மேற்படி சட்டம் பிரிவு 135(4)ன் கீழ் இறுதி அறிவிப்பு 23.12.2024ல் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் மேற்படி கட்டிடத்தின் உபயோகத்தை நிறுத்தும் பொருட்டு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 85–ன் கீழ் 23.12.2024ல் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது.

கட்டிட உரிமையாளர் கட்டிட உபயோகத்தை தொடர்ந்து பயன்படுத்தி வருவதால் நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56(4) மற்றும் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (அனுமதியற்ற கட்டுமானங்கள் அகற்றுதல்) விதிகள் 2022 பிரிவு (7)ன் கீழ் மேற்படி கட்டிடத்தை மூடி முத்திரையிட 13.03.2025 தேதியன்று உத்தரவிடப்பட்டுள்ளது.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நடுவ மன்றத்தில் 17.03.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 10.03.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு.R.மயில்சாமி என்பவர் 17.03.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு) வார்டு எண்.1, புதுவிளாங்குடி பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் கதவு எண்.107/2A, நேதாஜி மெயின் ரோடு, திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை தெற்குபுறம், புது விளாங்குடி, மதுரை 18–ல் என்கிற முகவரியில் கே.ஜெயக்குமார் மற்றும் சுகன்யா என்பவருக்கு சொந்தமான வர்த்தக கட்டிடத்திற்கு மதுரை மாநகராட்சியில் 92.78 ச.மீ கட்டிட அனுமதி பெற்றுக் கொண்டு சுமார் 3,000 சதுரடிக்கு மேலாக கூடுதலாகவும் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தில் அப்பலோ டயர்ஸ் , பவர் ஜோன் பேட்டரி மற்றும் செல்வம் டு வீலர் ஸ்பார்ட்ஸ் மொத்த உதிரி பாகங்களின் கடைகள் சட்டத்திற்கு புறம்பாக கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடம் வர்த்தக கட்டிடம் (Commercial Building) என்பதாலும், 3,000 சதுரடிக்கு கூடுதலாக கட்டப்பட்ட கட்டிடத்திற்கு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் திட்ட அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இதனால் பல லட்சம் ரூபாய் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பான மனு மீது மதுரை மாநகராட்சி மண்டலம் 2–ல் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

மேற்படி கட்டிடத்தின் மீதும், கட்டிட உரிமையாளர் மீது நடவடிக்கை இது நாள் வரையிலும் எடுக்க தவறிய உதவி ஆணையர் மற்றும் முன்னாள் உதவி ஆணையர் மற்றும் இதில் சம்பந்தப்பட்ட அனைத்து மாநகராட்சி அலுவலர்கள் மீது துறை ரீதியான கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்திரவிட்டும், தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971ன் பிரிவுகள் 56 மற்றும் 57, பிரிவு 85–ன் கீழ் மற்றும் வீட்டு வசதி துறையில் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.7 நாள் 10.01.2023ன்படி (Lock and Seal and demolition) மூடி முத்திரையிட்டும், தாக்கீது மற்றும் Stop work Notice/Notice Calling for approval plan அறிவிப்பு அளிக்குமாறும் மேலும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் W.P(MD) No.3140 of 2019 Dt,12.12.2023 நாளிட்ட தீர்ப்பில் மாண்பமை உச்ச நீதிமன்றம் Civil appeal No.14604 of 2024

தீர்ப்பிலும் ஆணையிட்டவாறு அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடங்களின் உரிமையாளர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கும்படியும் கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பாக காரமடை நகராட்சியால், ஏற்கனவே வழங்கப்பட்ட, அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடங்களின் உரிமையாளர்களின் மீது குற்றச்சாட்டு தாள்களின் நகலினை இம்முறைமன்ற நடுவர் முன் சமர்ப்பிக்கின்றேன்." என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி, மண்டலம் 2–ன் உதவி செயற் பொறியாளர் 17.03.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

மனுதாரர் புகாரில் தெரிவித்துள்ள மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வார்டு 1, புதுவிளாங்குடி பிட்1, சர்வே எண்.107/2A–ல் 92.78 ச.மீ பரப்பளவில் தரை தளத்தில் வணிக கட்டிடம் கட்ட இவ்வலுலகம் கடித எண்.ம1/647/21, நாள் 04.09.2021ன்படி கட்டிட அனுமதி திரு.ஜெயக்குமார் மற்றும் திருமதி ஜெ.சுகன்யா ஆகியோரின் பெயரில் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் மனுதாரர் கட்டிட அனுமதிக்கு மாறாக கீழ்க்கண்ட மாறுதல்களுடன் கட்டிடம் கட்டியுள்ளார்.

(1) அனுமதிக்கப்பட்ட தரை தளம் 92.78 ச.மீ பதிலாக 2500 சதுரடி பரப்பளவில் வணிக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

(2) அனுமதியின்றி தரை கீழ்தளம் 2,500 சதுரடி பரப்பளவில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

(3) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி முன்பக்கம் பின்பக்கம் மற்றும் பக்கவாட்டு திறவிடங்கள் விடப்படவில்லை.

கட்டிட உரிமையாளர் கட்டிட அனுமதிக்கு மாறுதலாக மேற்கண்ட மாறுதல்களுடன் கட்டிடம் கட்டியதால் மதுரை மாநகராட்சி சட்டப்பிரிவு 296(1)(2)–ன் கீழ் 01.11.2023 அன்று அறிவிப்பு அனுப்பப்பட்டது. இதனை தொடர்ந்து மதுரை மாநகராட்சி சட்டப்பிரிவு 296(3)–ன் கீழ் 22.12.2023ல் உறுதி அறிவிப்பு அனுப்பப்பட்டது .

மீண்டும் மேற்படி கட்டிடத்திற்கு புதிய தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 134,135(1)(2)–ன் கீழ் அறிவிப்பு 27.08.2024ல் அனுப்பப்பட்டது. மேற்படி கட்டிட உரிமையாளரிடமிருந்து எவ்வித பதில் வரப்படாததால் மேற்படி சட்டம் பிரிவு 135(4)ன் கீழ் இறுதி அறிவிப்பு 23.12.2024ல் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் மேற்படி கட்டிடத்தின் உபயோகத்தை நிறுத்தும் பொருட்டு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 85–ன் கீழ் 23.12.2024ல் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது.

கட்டிட உரிமையாளர் கட்டிட உபயோகத்தை தொடர்ந்து பயன்படுத்தி வருவதால் நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56(4) மற்றும் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (அனுமதியற்ற கட்டுமானங்கள் அகற்றுதல்) விதிகள் 2022 பிரிவு (7)ன் கீழ் மேற்படி கட்டிடத்தை மூடி முத்திரையிட 13.03.2025 தேதியன்று உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட அனுமதி இன்றி கட்டப்பட்ட கட்டிடத்தை காவல் துறை உதவியுடன் வரும் 19.03.2025 அன்று பூட்டி சீல் வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது." என தெரிவித்துள்ளார்.

7. எதிர்மனுதாரர்களான கட்டிட உரிமையாளர்களான திரு. ஜெயக்குமார் மற்றும் திருமதி J.சுகன்யா ஆகியோர் 17.03.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை. அன்னாருக்கு பதிவு தபாலில் அனுப்பப்பட்ட மனு **"insufficient address"** என்ற அஞ்சலக குறியீட்டுடன் திரும்ப பெறப்பட்டது.

8. மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் மதுரை மாநகராட்சி மண்டலம்–2 (வடக்கு) உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர், மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு) வார்டு எண்.1, புதுவிளாங்குடி பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் கதவு எண்.107/2A, நேதாஜி மெயின் ரோடு, திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை தெற்குபுறம், புது விளாங்குடி, மதுரை 18 என்கிற முகவரியில் கே.ஜெயக்குமார் மற்றும் சுகன்யா என்பவருக்கு சொந்தமான வர்த்தக கட்டிடத்திற்கு மதுரை மாநகராட்சியில் 92.78 ச.மீ கட்டிட அனுமதி பெற்றுக் கொண்டு சுமார் 3,000 சதுரடிக்கு மேலாக கூடுதலாகவும் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது எனவும், மேற்படி கட்டிடத்தின் மீதும், கட்டிட உரிமையாளர் மீது நடவடிக்கை இதுநாள் வரையிலும் எடுக்க தவறிய உதவி ஆணையர் மற்றும் முன்னாள் உதவி ஆணையர்கள் மற்றும் இதில் சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்கள் மீதும் துறை ரீதியான கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்திரவிடுமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் புகாரில் குறிப்பிட்டுள்ள மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வார்டு 1, புதுவிளாங்குடி பிட்1, சர்வே எண்.107/2A–ல் 92.78 ச.மீ பரப்பளவில் தரை தளத்தில் வணிக கட்டிடம் கட்ட மதுரை மாநகராட்சியால் கட்டிட அனுமதியினை, திரு.ஜெயக்குமார் மற்றும் திருமதி ஜெ.சுகன்யா ஆகியோரின் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்பதும், ஆனால் மனுதாரர் கட்டிட அனுமதிக்கு மாறாக,

(1) அனுமதிக்கப்பட்ட தரை தளம் 92.78 ச.மீ பதிலாக 2500 சதுரடி பரப்பளவில் வணிக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

(2) அனுமதியின்றி தரை கீழ்தளம் 2,500 சதுரடி பரப்பளவில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

(3) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி முன்பக்கம் பின்பக்கம் மற்றும் பக்கவாட்டு திறவிடங்கள் விடப்படவில்லை என்பதும்,

மதுரை மாநகராட்சி சட்டப்பிரிவு 296(1)(2)–ன் கீழ் 01.11.2023 அன்று மதுரை மாநகராட்சியால் அறிவிப்பு அனுப்பப்பட்டு, அதனை தொடர்ந்து மதுரை மாநகராட்சி சட்டப்பிரிவு 296(3)–ன் கீழ் 22.12.2023ல் உறுதி அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்பதும், மீண்டும் மேற்படி கட்டிடத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 134,135(1)(2)–ன் கீழ் அறிவிப்பு 27.08.2024ல் மதுரை மாநகராட்சியால் அனுப்பப்பட்டும், மேற்படி கட்டிட உரிமையாளரிடமிருந்து எவ்வித பதிலும் வரப்படாததால், மேற்படி சட்டம் பிரிவு 135(4)ன் கீழ் இறுதி அறிவிப்பு 23.12.2024ல் அனுப்பப்பட்டு, மேற்படி கட்டிடத்தின் உபயோகத்தை நிறுத்தும் பொருட்டு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 85–ன் கீழ் 23.12.2024ல் அறிவிப்பு மதுரை மாநகராட்சியால் அனுப்பப்பட்டுள்ளது என்பதும், மேலும், கட்டிட உரிமையாளர் கட்டிட உபயோகத்தை தொடர்ந்து பயன்படுத்தி வருவதால், நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56(4) மற்றும் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (அனுமதியற்ற கட்டுமானங்கள் அகற்றுதல்) விதிகள் 2022 பிரிவு (7)ன் கீழ் மேற்படி கட்டிடத்தை மூடி முத்திரையிட 13.03.2025 தேதியன்று உத்தரவிடப்பட்டது என்பதும், மேற்கண்ட அனுமதி இன்றி கட்டப்பட்ட கட்டிடத்தை காவல் துறை

உதவியுடன் வரும் **19.3.2025** அன்று பூட்டி சீல் வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக, மதுரை மாநகராட்சி, மண்டலம் 2 (வடக்கு) உதவி ஆணையரின் அறிக்கைகள் மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மதுரை மாநகராட்சி மண்டலம்–2–ன் உதவி செயற் பொறியாளர், தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, மேற்கண்ட கட்டிடத்தின் மீது தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் ஊரமைப்பு சட்டம் **1971**–ன்படியும் மற்றும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம், **1998**–ன்படியும் உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்குமாறும் மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை W.P.(MD).No.3140/2019–ன் **12.12.2023** நாளிட்ட ஆணையினை தவறாமல் பின்பற்றுமாறும் மதுரை மாநகராட்சி மண்டலம் **2**–ன் உதவி ஆணையருக்கு உத்திரவிடுமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

**2025**ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் **23**ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. R. மயில்சாமி,
பிளாட் எண்.5, செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி, மதுரை.

(2) திரு.K.ஜெயக்குமார் (ம)
திருமதி.J.சுகன்யா,102/2, 107/2A,
யூனியன் பேங் காலனி,
நேதாஜி மெயின் ரோடு,
திண்டுக்கல் மெயின் ரோடு,
மதுரை–18.

(3) ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
தல்லா குளம்,
மதுரை–625 002.

(4) உதவி ஆணையர்,
மண்டலம் 2 (வடக்கு),
மதுரை மாநகராட்சி,
ரேஸ்கோர்ஸ் ரோடு,
மதுரை–625 002.

(5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

(5) இணை இயக்குநர், ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.